# அக்கமாதேவியின் வசனங்களில் சைவசித்தாந்த சிந்தனைகள்

செல்வகுமாரி. சி

**ஆய்வுச்சுருக்கம்:**

அக்கமாதேவியார் (கி.பி 12ஆம் நூற்றாண்டு) வடஇந்தியாவில், கர்நாடக மாநிலத்தில் சிவமொகா மாவட்டத்திலுள்ள "உடுதடி" என்னும் சிற்றூரில் நிர்மலன் – சுமதி ஆகியோருக்கு மகவாக அவதரித்தார். இளமைப் பருவத்திலிருந்தே கல்வி, இலக்கியப் படைப்பாற்றல் மற்றும் வீரசைவ ஞானத்தில் சிறந்து விளங்கினார். வீரசைவ அருளாளர்களாலும் பக்தர்களாலும் அக்கா, அக்கமாதேவி, மாதேவியக்கா, மகாதேவியார் என அழைக்கப்பட்டதோடு, வீரசைவத்தின் 'ஐந்து தூண்களில் ஒருவர்' எனவும் போற்றப்பட்டார். சமண சமயத்தைச் சார்ந்த அரசன் கௌசிகனை மூன்று நிபந்தனைகளின் அடிப்படையில் திருமணம் புரிந்து கொண்டதாகவும் அரசன் அந்நிபந்தனைகளை மீற முற்பட்டதாகவும் அதனால் திகம்பரி கோலம் பூண்டு, ஸ்ரீ சைலத்தை அடைந்து, அங்கு வீரசைவ அருளாளர்களின் வரிசையில் முதன்மை பெறும் பசவண்ணரினால் கல்யாண்நகரில் நிறுவப்பட்ட வீரசைவ நிலையத்தில் இணைந்து, இந்நெறியின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றிய பெண் ஆளுமையாக – பெண் பக்தையாக – வீரசைவ கன்னடப் பெண் கவியாக அறியப்படுகிறார். இவர், 'சென்னமல்லிகார்ச்சுனர்' (சிவன்) மீது தான் கொண்ட தெய்விகக் காதல் அனுபவத்தினை, கன்னட மொழியில் பல வசனங்களாக அருளினார். இவ்வசனங்களை ஆழ்ந்து நுணுகின், இவை வீரசைவநெறி சார்ந்த சமய, தத்துவக் கருத்துகளை விபரிப்பதோடல்லாது, சைவசித்தாந்த சிந்தனைகளுக்கும் முதன்மையளித்துள்ளன. இப்பின்னணியில், அக்கமாதேவியின் வசனங்களில் புலனாகும் சைவசித்தாந்த சிந்தனைகளை இனங்காண்பதே இவ்வாய்வின் நோக்கமாகும். சிவசரணியரான (வீரசைவப் பெண்ணடியார்) அக்கமாதேவியார், தனது தெய்விகக் காதல் அனுபவத்தின் வெளிப்பாடுகளுக்கு மத்தியில், சைவசித்தாந்த சிந்தனைகளுக்கு முதன்மையளித்தது ஏன்? என்பதே ஆய்வுப் பிரச்சினையாகும். அக்கமாதேவியின் வசனங்கள், சைவசித்தாந்தக் கருத்துக்களின் கருவூலமாகத் திகழ்கின்றன எனும் கருதுகோளின் அடிப்படையில் இவ்வாய்வு நகர்கின்றது. அக்கமாதேவியின் வசனங்கள் முதலாம் நிலைத் தரவுகளாகவும் அவை தொடர்பாக வெளிவந்த ஏனைய நூல்கள், கட்டுரைகள், சஞ்சிகைகள் மற்றும் இணையத்தளக் குறிப்புகள் ஆகியவற்றினை இரண்டாம் நிலைத் தரவுகளாகவும் கொண்டு, விபரண, ஒப்பீட்டு மற்றும் வரலாற்றியல் ஆய்வு முறையியல்களைப் பயன்படுத்தி இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அக்கமாதேவியின் வசனங்களானவை பரம்பொருளின் இயல்பு, அதன் இலக்கணம், ஆன்ம இருப்பு, உடலின் நிலையற்ற தன்மை, ஆன்மாவின் இலட்சியம், மும்மலங்கள் (ஆணவம், கன்மம், மாயை), குரு, இலிங்க, சங்கம வழிபாடு, சிவசின்னங்கள், சைவநாற்பாதங்கள், தீட்ஷை மற்றும் சிவசக்தி தத்துவம் எனச் சைவசித்தாந்த சிந்தனைகளுக்கும் முதன்மையளித்துள்ளன என்பதனை இவ்வாய்வு தனது முடிவாக உரைக்க முற்படுகிறது.

**திறவுச்சொற்கள்:** அக்கமாதேவியார், வீரசைவம், சைவசித்தாந்தம், திகம்பரி, சிவசரணியர்

[1]மொழித்துறை, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
selvakumari.selva@gmail.com